உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௰.] ஜய௵—புரட்டாசி௴ [பகுதி-௧௧.

Vol. 50. September–October—1954. No. 11.

சிந்தாமணி விளக்கம்: சீவகன்பெயர்

திரு. நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை,

(262-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, சீவகனைக் கட்டியங்காரன் சிறைகொளப்புக்க வரலாறு இவ்வாராய்ச்சிக்கு உதவுவதில் தனிச்சிறப்பான தன்மை வாய்ந்தது. தான் சீவிப்பவன்-சீவகன் என்பதேயன்றி, பகைவரால் வெல்லவும் கொல்லவும் அரியவன் அவன் என்பது இதனால் விசதமாக வெளியாகின்றது.

பேரிதரி திவனைக் கொன்றாய்! பெறுகெனச் சிறப்புச் செய்தான் (1165)

எனப் பொய்யை மெய்யாகக்கொண்டு கட்டியங்காரன் களிப்புற்ற செய்தி இங்குக் கூர்நோக்க உரியது. இவ்வளவினும் அமையாமல், இறந்தனன் என்று யாவரும் மயங்க, உயிருடன் வாழ்ந்து புகழுடன் மீண்டவன்-சீவகன் என்ற வியத்தகு பொருளும் இதில் விளக்கமுறக் காணலாம்.

சீவகனால் செருக்கடங்கிய யானை கவளங்கொள்ளாமையால் கட்டியங்காரனுக்குக் கடுஞ்சினம் மூண்டது. உடனே அவன் 'செட்டிமகனைப் பற்றிக்கொணர்க' என மதனன் முதலிய வீரர்க்குக்

கட்டளையிட்டான். அதனால் அவர் தென்புலக்கோமகன் தூதர் போற்சென்று, சிங்கத்தை இகழும் சிறுநரிக் குழாம்போல் சீவக னிருப்பிடம் சூழ்ந்துகொண்டார்கள். அதுகண்ட அவன் திரிபுரம் எரித்த சிவபிரான்போல மாற்றருஞ்சீற்றம் மேன்மேல் வளரப் போர்க் கோலம்பூண்டு புறப்போந்தனன். ஆயினும் அவ்வளவிலே அவன் தான் முன்பு ஆசிரியர்க்கு நேர்ந்த ஆணையை நினைதலால், வீரம் பிணிப்புண்டு வெகுளியும் தணிந்தனன்.

ஊன்பிறங் கொளிறும் வேலான் ஓர்த்துத்தன் உவாத்தி சொல்லால்
தான்புறம் கட்டப் பட்டுத் தன்சினந் தணிந்து நிற்ப (1090)

என்பது இந்நிகழ்ச்சி குறிக்கும் சிந்தாமணிச் செய்யுள் பகுதி. இங்கு, வேலான் என்றது சீவகனை. வேலுடையனாதலும் அதனால் ஒருபயனுமின்றி வெஞ்சினம் தணியவேண்டிற்றென இரங்கிக்கூறிய வாறு. ஓர்த்து-செய்வதும் தவிர்வதும் சீர்தூக்கி ஆராய்ந்து. உவாத்திசொல் - அச்சணந்தி ஆசிரியரின் மாற்றுதற்கரிய வாய் மொழி; 'ஓர்யாண்டளவும் அப் பகைவனுக்கு ஊறுசெய்யலாகாது' என அவர் முன்னே சொன்னது. அவன் வேல்வலியையும் வெறு விதாக்கிற்று அவர் சொல்வலி என்பதாம். 'தான்புறம் கட்டப் பட்டு' என்றது, போர்க்கோலம் பூண்ட தான் புறப்பொருளாகிய வீரம் பிணிப்புண்ணப்பெற்று என்றவாறு. சொல்கட்டிற்று என் னாது, சொல்லால் கட்டுப்பட்டு என்றதனால், அவன் தானே கட் டுண்ணப் பண்ணிக்கொண்டான் என ஒரு பொருளும் தோன்றிற்று. 'தன்சினந் தணிந்து நிற்ப' என்றது, தன் ஆறாத சீற்றமும் ஆறுத லுற்று, போராற்றல் தவிர்ந்து பேராற்றல் விளங்க நின்றனன் சீவகன்; என்பது உணர்த்தியவாறு.

இங்ஙனம் ஆசிரியர் சொல்லுக்கு அடங்கித் தொழில்புரியாது நின்ற சீவகனது செயற்கருஞ் செயல்திறம் வியக்கருந் தகையது. படைக்கலமும் வாய்த்துப் பகைவனை மாய்த்தலும் எளிதாக நேர் பட்ட பொழுது, அதுசெய்யாது ஆண்மையை அடக்கி நிறுத்துதல்

யார்க்கும் அரிதினும் அரியதேயாம். ஆதலின் (ஆசிரியர் கூற்றுன) 'அச்சொல் அரியதோன்றலை விலக்கிற்று' என இங்கு நச்சினார்க்கினியர் குறித்த நயம் நவில்தொறும் இன்பம் தரும். 'வேலான்' என்ற கருத்துடையடையால் உய்த்துணர்ந்த பொருளாகும் இது. இதுபோலவே நாமகளிலம்பகத்தில் இவ் அருஞ்செயல் கூறியவிடத்தும் சீவகனைத் தேவர் 'வில்வலான்' என விசேடித்தார்.

யாண்டுநே செல்லை யாக அவன்திறத் தழற்சி யின்மை
வேண்டுவல் என்று சொன்னான் வில்வலான் அதனை நேர்ந்தான் (393)

என்றது காணலாம். இங்கு, அவன் என்றது கட்டியங்காரனை; சொன்னான் என்றது அச்சணந்தியை; வில்வலான் என்றது சீவகனை. 'வில்வல்லானும் நேர்வரியதனை நேர்ந்தான்' என அவ்விடத்தும் நச்சினார்க்கினியர் அருமையாக உரைத்துப் போந்தனர். 'வில் வலான்' என்ற கருத்துடை அடையால் உய்த்துணர்ந்த பொருளே இதுவும். அங்கு வேலான் என்றதுபோல இங்கு வில்வலான் என்றதும், சீவகன் வில்லின் வலியையும் ஆசிரியர் சொல்லின்வலி வெல்லுந்தகையதாயிற்றென வியப்புக் குறித்து நின்றது.

இவ்வளவன்றி இப் பெயரடைகளால் வேறொரு பொருளும் விளங்கித் தோன்றும். வில்லும் வேலுமாகிய படைக்கலங்கள் அவனுக்கு அவ்வாசிரியர் பயிற்றுவித்தன; ஆகையால் அவற்றால் பயன் கொள்ளுங்காலும் அவனுக்கு அவரானை கடக்கலாகாதாயிற்றென, அதற்குக் காரணம் குறித்ததாகவும் கொள்ளப்படும். இவ் அரிய கருத்துக்களை அடக்கிநின்ற பாடற்பகுதிகள் இன்னும் பலவுள.

ஏ வியல் சிலையி னானை இப்பொருள் கேண்மோ என்றான் (384)

சிலையொடு பகழி யேந்திக் கூற்றெனச் சினந்து நின்ற
இலையுடைக் கண்ணி யானை இன்னணம் விலக்கி னானே (392)

கோளிபக்கு உழுவை யன்ன கொடுஞ்சிலை யுழவன் கேட்டே (405)

என்பன காணத்தக்கன. சில விசேடணம் பலவிடத்துக் கூறியதன் பயன், அவ் வுய்த்துணர் பொருளைத் தெற்றென விளக்கலேயாம். 'தன்குறி வழக்கம் மிக எடுத்துரைத்தல்' என்னும் தந்திரவுத்தி போல்வதொரு காவியமரபு இது.

இவ்வாறு குரவர்பணி குன்றாமல் காத்தது, சீவகனுண்மை யைச் சிறுமை யுறுவிப்பதாகாது; அன்றி அதனை அது பெருமை யுறுவிப்பதும் ஆம். போரின்கண் செயலாற்றல் ஒருவர்க்கு ஆண் மையே எனினும், அறப்பயன் கருதி அவ் வாற்றலை அடக்கி ஆளு தல், அதனினுஞ் சிறக்கப் பேராண்மை யென்று பேணத் தகும்.

> திறப்பெரும் படைக்கலம் திறத்தின் நேர்உற
> மறப்பயன் விளைக்குறும் வன்மை அன்றரோ;
> இறப்பினும் திருவெலாம் இழப்ப எய்தினும்
> துறப்பிலர் அறம்எனல் சூரர் ஆவதே! (இராமாவ. தைலமா. 30)

என்ற கவியரசர் வாய்மொழி இதற்குக் கரியாக வல்லது. குரவர் சொல் தலைநின்று அறப்பணி யாற்றி, இத்தகைய பேராண்மை நிறு விய சீவகன் ஓராற்றால் இராமனை ஒத்தனன் என்னலாம்.

இனி, ஆசிரியர்க்கு நேர்ந்த வாய்மை வழுவாமைப் பொருட்டே சீவகன் சினந்தணிந்தான் என்ற இவ் வுண்மையை அயலவர் அறி யார். ஏனெனில், முன்பு அவ்வாசிரியராணையை அவன் ஏற்றுக் கொண்டது மிகவும் மறைபொருளாக நிகழ்ந்தது.

> பூவையும் கிளியும் மன்னர் ஒற்றெனப் புணர்க்கும் சாதி
> யாவையும் இன்மை ஆராய்ந்து......(384)

அச்சணந்தி அவ் அருமறையை அவனுக்குத் தேற்றினர் என்ப. ஆகையால் இப்பொழுது அவன் சினந்தணிந்த காரணம் பொதுமக் கட்குப் புலனாகாததே யாம். ஆயினும் அம்மக்கள் அதன் காரணம் யாதென ஆராயாதிருப்பவ ரல்லரே? அதனால் காவியப் புணர்ப்பில்

இஃதோர் இடுக்கண்படும் இடம். எனினும் இது மிக எளிதாகவும் இனிதாகவும் களையப்பெறுகின்றது. இன்றுச் சீவகனது செயலற வுக்கு எதிர்பாராத பிறிதொரு காரணத்தையும் இணைத்துவைத் தது, சிந்தாமணிப் புலவரின் செய்யுள் திறம்.

> ஊன்பிறங் கொளிரும் வேலான் ஓர்த்துத்தன் உவாத்தி சொல்லால்
> தான்புறங் கட்டப் பட்டுத் தன்சினந் தணிந்து நிற்பத்
> தேன்பிறங் கலங்கல் மாலைச் சுநந்தையுந் துணைவன் தானும்
> கோன்புறங் காப்பச் சேறல் குணமெனக் கூறினாரே (1090)

என்ற அச் செய்யுளின் பிற்பகுதியிற் பொருள் அற்புதமாக அமைந் தது. இப் பகுதியில், சுநந்தை-சீவகன் தாய்; துணைவன்-அவள் கணவனாகிய கந்துகன்; கோன்-அரசனாகிய கட்டியங்காரன். ஆசிரி யர் பணியால் அடங்கிய அளவிலே, அவனுக்குத் தாய்தந்தையர் பணியும் அதனுடன் சேர்ந்தது. அவரும் வேந்தனொடு வெகுளாமை வேண்டினர். அதனால் சீவகனது சினம் அடங்கிய ஒரு செயலுக்கு இரு காரணம் இனிதின் இசைந்து இக்குக் காப்பியத் தொடர்பினை வாய்ப்புடைத் தாக்கிற்று.

இதில் 'கோன் புறங்காப்பச் சேறல் குணம்' என்றது, அஃது அவன் ஆண்மையைக் குற்றமுட்டாது குணந்திகழச் செய்யும் என்ற தாம். மேல் 'தோன்றலுக் காண்மை குன்றாது' (1091) என்றதற் கும் இதுவே கருத்து.

இனி, ஆசிரியராணையும் ஈன்றவராணையு மாகிய இவ் இருவகைக் காரணங்களில் பிந்தியதொன்றினை மட்டும் உணர்ந்தவர்,

> ஈன்றதாய் தந்தை வேண்ட இவ்விடர் உற்றது (1091)
> ஏற்றதொன் றன்று தந்தை செய்தவிக் கொடுமை (1109)
> தாயொ டெண்ணித் தந்தையிக் கொடுமை செய்தான் (1135)

என்று பேசி இரங்குவாராயினர். இந்நிலையிலே கட்டியங்காரன் காவ லாளர், தம் அரசனாணையால் கட்டுண்டான் சீவகன் என, அறியா மையால் மயங்கலும் அதிசயமே யன்றோ?

ஆசிரிய ராணையோடு பெற்றோராணையும் சேரப் பிணிப்புண்டு செல்லும் சீவகனை அரசர் ஆணையாளர் வேறு விலங்கிட்டுக் கட்டினார் எனல் வேண்டற்பாலதே அன்று. 'மூன்றனைத் துலகமெல்லாம் முட்டினும் முறுக்கும் ஆற்றல்....மதவலி' (1091) யாகிய அவனைப் பிணித்தல் அவரால் இயலாததும் ஆம். ஆகையால் அது 'மிகைபடு பொருளை நகைபடு புன்சொலில்' புணர்த்தார் கூற்றேயல்லது பிறிதில்லை. அதனை மறுப்பதற்கு நச்சினார்க்கினியர் அரும்பாடு பட்டனர்.

இங்ஙனம் தனக்கு இடையூறு நேரினும் தான் ஆசிரியர்க்கு நேர்ந்த வாய்மை வழுவாமை மெய்யான உயிர்வாழ்க்கை எனக் கடைப்பிடித்தவன்-சீவகன். வாய்மையறம் அழிய வாழ்ந்திருப்பவர் மெய்யாக மாய்ந்தவரின் வேறல்லர் என்பதாம். ஆகவே அவன் சிறைபுகா முன்னம் சீற்றம் தவிர்ந்தனன் என்ற இச் சிறிய வரலாற்றுக் குறிப்பு, சீவகப்பெயர்ப்பொருளை இங்ஙனம் விவரிப்பது என்னலாம். இது நிற்க.

'நின் பகைவன் நின்றான்' (391) எனச் சீவகனுக்குச் சென்மப் பகைவனைக் காட்டிக்கொடுத்த ஆசிரியர் அவனை உடனே ஒறுக்கவொட்டாமல் இக் கொடிய தடையினை விதித்தது என்கருதி? என ஆராயத்தகும். அச்சணந்தி ஆசிரியர், வருவதை அறியவல்ல மாதவம் படைத்தவர். அதனால் அவனை ஊட்ட இருந்த ஊழின் வலியினை அவர் நன்கு உணர்ந்தனர். 'உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா'. ஆகையால் அது கழிந்தபின் அவன் வினைத்திட்பமுடையவனாகி வெம்பகை முடித்தலை அவர் பெரிதும் விரும்பினர். அக்காரணத்தாலே சீவகன் கட்டியங்காரனை அப்பொழுதே ஒறுப்பதை அவர் மறுத்தனர் என்னவேண்டும்.

இதுவரை சொல்லியவற்றால் வாய்மையில் திறம்பாது, உண்மை உயிர் வாழ்வு வாழ்ந்தவன்-சீவகன் என முடிந்தது.

(தொடரும்)

இராமாவதாரத் தனிச்செய்யுள் உரை

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L. மதுரை.

(282-ம் பக்கத்தொடர்ச்சி)

சிறப்புப்பாயிரம்-6

வைய மென்னை இகழவும் மாசெனக்
கெய்த வும்மிஃ தியம்புவ தியாதெனில்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே.

இதன் பொருள்:—வையம் - உலகத்தோர், என்னை இகழவும் - என்னை இழிவாகப்பேசவும், மாசு - குற்றம், எனக்கு எய்தவும் - என்னை வந்தடையவும், இஃது - இந்த நூலை, இயம்புவது - சொல்வது, யாது எனின் - ஏன் என்று கேட்டால், பொய் இல் - எக்காலத்தும் பொய்த்தல் இல்லாத (உண்மையான), கேள்வி - கேள்வியறிவின்கண், புலமையினோர் - புலமையை உடையவர், புகல் - கூறியுள்ள, தெய்வமாக்கவி - தெய்விகத்தன்மைபொருந்திய லக்ஷணமான கவியினுடைய, மாட்சி - பெருமையை, தெரிக்கவே - வெளியாக்குதற்பொருட்டே : என்பதாம்.

கருத்து:—வையம் என்றது, 'உலகமென்ப துயர்ந்தோர்மேற்றே' என்பதனால், உலகத்து உயர்ந்த மாந்தர் என்றவாறு. பொய்யில் கேள்வி என்றது, ஸத்யவாக்காயும் எழுதாக்கிளவியாயுமுள்ள வேதத்தை. அதன்கண் புலமையினோர் என்றது, வான்மீகியை. தெய்வமாக்கவி என்றது, சொற்களின் மந்திரத்தன்மையோடு, தேவர்களும் கற்றுக்களிக்கும் நூலாக வான்மீகிராமாயணம் அமைந்திருப்பதை உணர்த்துகிறது.

கல்வியிற் பெரியார் வால்மீகிராமாயணத்தைக் கற்றுத்தேறி என் இராமகாதையைப் பார்த்தால், இவ்விதனாலே இயற்றத் தலைப்பட்ட என்னை இகழ்வார்கள். கவித்திறன் முதலிய அம்சங்கள் யாதொன்றும் என்னிடமில்லையாதலின், மிகஉயரிய இராமகாதையை மிக எளியமுறையிற் செய்ததால் எனக்குப் பாவமும் பழியுங்கூட வரும்.

குருவினிடமிருந்து காதாற் கேட்டறியவேண்டியதாதலால் சுருதி, வேதம், என்னும் பொருளை, 'கேள்வி' என்னும் சொல் குறிக்கிறது. 'பொய்யில் கேள்வி' என்ற அடைமொழியால் இஃது உறுதியாகின்றது.

நித்யமான ஸத்யம், முக்காலும் உண்மையான பொருள்களையே வேதம் சொல்லும். ஒருபொழுதும் பொய்யைச் சொல்லாது. இராமலக்ஷ்மணர்கள் பொய் சொல்லமாட்டார்கள் என்பதைக் கவி பின்வருமாறு பேசியுள்ளார்:

"வேத முரை நாவர்" (மாரீ. வதை. 54)

என்றது காணலாம்.

"வேதம்
தப்பிய போது மன்னன் தனுவுமிழ் சரங்கள் தப்பா"
(கும்ப. வதை. 24)

வேதம் எப்படிப் பிழையாதோ, அப்படியே இராமன் வில் எறியும் அம்புகளும் பிழையா என்பதாம்.

வால்மீகியின் புலமையைக் கவி வேதப்புலமை என்று பாராட்டுகிறார். வேதமே வான்மீகி ராமாயணம் என்னும் காவ்ய ரூபத்தை அடைந்திருத்தலால், அதில், கற்போருக்கு ஏதோ கவியின் மனோதர்மம் போலவும் வர்ணனை போலவும் தோன்றும் பாகங்களெல்லாம்

கூட, வேதமாக, நித்யஸத்யமாகவுள்ள பொருள்கள் என்பது கம்பர் கருத்து. தன்னுடைய புலமை கேவலம் நூற்புலமையாதலின், அது வேதப் புலமைக் கெதிரே நில்லாதென்பதாம்.

'தெய்வமாக்கவி' என்பதை 'வான்மீகி யென்பான் தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்' என நாட்டுப்படலம் முதற்பாட்டில் விரித்துரைத்தது நோக்கத்தக்கது. காவியம் இயற்றுவ தென்றால், கற்பனைகள் மனோதர்மங்கள் உண்மையல்லாத பொருள்கள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் இயற்றல் கூடும்; நூற்புலமை மட்டுமுள்ள என் காவ்யம் கற்பனை நூலாக அமையும்; இதை வைத்து முற்றிலும் உண்மைப்பொருள்களாலான வான்மீகி ராமாயணத்தை நோக்கினால்தான், அதன் அருமையும் பெருமையும் வெளியாகுமாதலின், அவ்விதம் வைத்து நோக்குதற்கு உதவும் ஒரு நூலை நான் இயற்றுகிறேன்: என்று கவி தொடங்குகிறார். இம் மெய்ம்மையும் பொய்ம்மையும் பலஉதாரணங்களால் நிரூபிக்கற்பாலன.

நெடுஞ்செழியன்

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

நெடுஞ்செழியன் என்னும் பெயரையுடையவர்கள் மூவர் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றனர். அவர்கள், நம்பிநெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் ஆவர். இம் மூவரும் ஒருகாலத்தவராகக் காணப்படுதலின் ஒருவரேயாதல் வேண்டும். அக் காலத்துப் பாண்டியர்கள் சேர சோழர்களைப் போலத் தம் நாட்டைப் பல பகுதிகளாகப் பகிர்ந்துகொண்டு ஒரே சமயத்துப் பலரும் மன்னர்களாக ஆண்டு வந்ததாகத் தெரியவில்லை. மூவரும் ஒருவரே யாதல் வேண்டும் என்பதற்கு வேறு சான்று காண்போம்.

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்று கூறினன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். "உலகமொடு நிலைஇய பலர்புகழ்சிறப்பின் புலவர் பாடாது வரைகஎன் நிலவரை" எனக் கூறினன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். அவனைப் புகழ்ந்து பாடிய மாங்குடி மருதனார், மதுரைக் காஞ்சியில் மதுரைமாநகரச் சிறப்புக் கூறும் பகுதியில் "நல்வேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர்" என ஆசிரியர்களைச் சிறப்பிக்கின்றார். இக் காஞ்சி அடிகளுக்கு நச்சினார்க்கினியர் உரை கூறுமிடத்து "தொல் ஆணை நல்லாசிரியர்-பழைய ஆணைகளையுடைய நல்லாசிரியர்" எனப் பொருள் கூறுவர். பட்டினப்பாலையில் வரும் இதே தொடருக்கு உரை கூறுகையில் "தொல் ஆணை" "பெரிய ஆக்கினை" என்று பொருள் கூறுவர். இதனால் அவ் வாசிரியர்பால் கற்பவர், பிற்றைநிலை முனியாது கற்பவர் என்பது பெறப்படுகிறது. ஆதலின், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனும் ஒருவரேயாவர் என்பது பெறப்படும். பேரெயின் முறுவலார் நம்பி நெடுஞ்செழியனை "மயக்குடைய மொழிவிடுத்தனன்" எனக் கூறுகின்றார். இந் நெடுஞ்செழியனும் மேற்குறித்த இருவரோடு மூன்றாமவனாகச் சேர்த்து எண்ணக்கூடியவனாதல் வேண்டும்,

"செற்றோரை வழிதபுத்தனன், வலியரென வழிமொழியலன், மெலியரென மீக்கூறலன்" என நம்பிநெடுஞ்செழியனைப் பேரெயின் முறுவலார் குறிக்கின்றார். "உறுதுப் பஞ்சாது உடல்சினம் செருக்கிச் சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை, அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு ஒருங்ககப் படேஎ னாயின்" என வஞ்சினங் கூறுகின்றான் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன். மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சியில் 24–63, 125–132, 146-191ம் அடிகளும் புறநானூற்று 26ம் செய்யுளும் இவற்றோடு ஒப்பு நோக்குதற்குரியன. ஆதலின் இவ்விரு நெடுஞ்செழியர்களும் ஒருவரேயாதல் வேண்டும்.

"இரந்தோர்க்கு மறுப்பறியலன்" நம்பி நெடுஞ்செழியன் என்றார் பேரெயில் முறுவலார். "அரியவெல்லாம் எளிதினிற் கொண்டு உரிய வெல்லாம் ஓம்பாது வீசினன்" தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனக் கூறுகிறது மதுரைக்காஞ்சி. புறநானூற்று 313, 372ம் செய்யுட்களும் இதனை வலியுறுத்தும். இந் நெடுஞ்செழியனே "இரப்போர்க் கீயா இன்மையா னுறவே" என்று சூளுரைத்திருக்கின்றான். ஆதலின் இரு நெடுஞ்செழியர்களும் ஒருவரே யாதல் வேண்டும்.

"மயக்குறு மக்களை யில்லோர்க்குப் பயக்குறை யில்லை தாம் வாழும் நாளே" என்றான் பாண்டியன் அறிவுடை நம்பி. "அந்தி விழவில் தூரியம் கறங்கத், திண்கதிர் மதாணித் தண்குறு மாக்களை ஓம்பினர் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித், தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத், தாமும் அவரும் ஓராங்கு விளங்கக், காமர் கவினிய பேரிளம் பெண்டிர், பூவினர் புகையினர் தொழுதனர் பழிச்சி, சிறந்துபுறங் காக்கும் கடவுட் பள்ளியும்" (460—467) என்று மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியுள் மகப்பேற்றின் சிறப்பினைக் குறிக்கின்றார். ஆதலின் அறிவுடைநம்பியும் மதுரைக் காஞ்சி குறிக்கும் நெடுஞ்செழியனும் ஒருவரே யாதல் வேண்டும்.

கால ஒற்றுமையினாலும் மேற்குறித்த காரணங்களினாலும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், அறிவுடை நம்பி, நம்பி நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியன் ஆகிய நால்வரும் ஒருவரே யாதல் வேண்டும். இஃது இன்னும் ஆய்வுக்குரியது.

திருப்பெருந்துறை ஆளுடைய நாயகர் திருக்கோயில் கனகசபைமண்டபத்தில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுப் பாடல்கள்

வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
ஆசிரியர், ஆராய்ச்சித்துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

முன்னுரை

திருப்பெருந்துறை என்பது [1]வைப்புத் தலங்களுள் ஒன்று. மாணிக்கவாசகப் பெருந்தகையார்க்குச் சிவபெருமான் குருந்தமர நிழலில் ஞானாசிரியராக எழுந்தருளியிருந்து உபதேசித்த பழஞ் சிறப்புடைய பதி. இங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயர் ஆளுடைய நாயகர் என்பதாகும். இப் பெயரே ஆவுடையார்[2] எனச் சிதைந்து கோவில் என்னும் பெயரோடு சேர்ந்து ஆவுடையார்கோவில் என வழங்கப்பெறுகின்றது. இது பழமையும் பெருமையும் வாய்ந்த திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது. இவ் வாதீனத்தில் இப்பொழுது இருபத்தொன்றும் பட்டத்தில் வீற்றிருந்து அருட்செங்கோல்நடத்திவரும் மாண்புமிக்க மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகபரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் பட்டத்திற்கு எழுந்தருளியதும், தங்கள் ஆதீனக் கோவில்களின் கல்வெட்டுக்களைப் பொருட் சுருக்கத்துடன் வெளியிட வேண்டுமென்னும் திருவுளப்பாங்கு உடையவர்களாய் அடியேனை இப்பணியில் ஈடுபடுத்தி அருளுகின்றார்கள். மகாசந்நிதானம் பணித்தருளிய வண்ணம்; திருவாவடுதுறை, திருப்பெருந்துறை,

---

[1] *திருநாவுக்கரசர் க்ஷேத்திரக்கோவை இரண்டாம் திருப்பாடல்.*

[2] *இவ் வழக்கம் இக் கோயிலிலுள்ள பச்சையப்பமுதலியார் கல்வெட்டில் தான் முதல்முதல் காணப்படுகிறது. ஏனைய கல்வெட்டுக்களில் திருப்பெருந்துறை ஆளுடைய நாயகர் கோவில் எனக் குறிக்கப்பெற்றுள்ளது.*

திருவிடைமருதூர் இக்கோயில் கல்வெட்டுக்களைப்படித்துப் பொருட் சுருக்கங்களும் எழுதி மகாசந்நிதானத்தின் திருமுன்பு சேர்ப்பித் துள்ளேன். மகாசந்நிதானம் அவர்கள் அடியேனை இங்ஙனம் ஊக்கி யருளுவதைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இக் கல்வெட்டுப்பாடல் கள் இதுகாறும் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளி வாராதவைகள்.

கட்டளைக் கலித்துறை

இதம்வெகு வாகுங் கனக சபையிலெழுதுஞ் சித்ரப்
பதம்வெகு வாகும் பவனஞ்செய் தானித்தப் பாக்கலெல்லாந்
திதம்வெகு வாகச்செய் தான்வந்த விக்கினந் தீர்த்துச்செய்தான்
விதம்வெகு வாகச்செய் தானெங்கள் சொக்க விநாயகனே (1)

கோடிக்கை மற்றைக் கதைசெய்வங் கோமளக் கோதையர்க
ளாடிக்கை காட்டு மடமாதர் நாரிய ராயிழையார்
பாடிக்கை காட்டுங் கனக சபைதன்னிற் பாக்கலெல்லாம்
வேடிக்கை யாகச்செய் தானெங்கள் கோபுர வேலவனே (2)

திதிக்குஞ் சகாத்தமிக் கொன்றரை யாயிரஞ் செல்லறுநான்
குதிக்கும் பிலவத்திற் பங்குனி மாதத்தி லொன்பதிற்றிற்
பதிக்குங் கனக சபைமண்ட பந்தன்னிற் பாக்கலெல்லாம்
மதிக்கும் படிமுகித் தானெங்கள் மாணிக்க வாசகனே (3)

தலஞ்சேர் பிலவ வருடப் பங்குனி தனில்நவத்து
வலஞ்சேர் நற்சனி வாரத்து மூல மகிழட்டமிப்
பலஞ்சேர் நாளிற் கனக சபைதன்னிற் பாக்கலெல்லாம்
நலஞ்சே ரவேமுகித் தானெங்க ளாளுடை நாயகனே (4)

எண்காண் விசைய வருடத் துவக்க விதம்பெறவே
தண்காண் பிலவ வருடப் பங்குனி தனில்நவமாம்
பண்காண் கனக சபைமண்ட பந்தனிற் பாக்கலெல்லாங்
கண்காண வேமுகித் தாள்யோக நாயகிக் காரிகையே (5)

கருத்து

கனகசபை மண்டபம் மேற்பாகம் ஏற்கனவே தூண் மட்டும் நிறுத்தி முடிவுபெறும லிருந்ததை மேற்பாவுகல் (பாக்கல்) பாவிப் பூர்த்திசெய்த விவரம் இவைகளால் தெரிவிக்கப் பட்டிருக் கிறது. இதைக் கட்டுவித்தவர் தம் பெயரைக் காட்டிக்கொள்ள

அஞ்சி, இதனை விநாயகர் திருவருளாலும், கோபுர வேலவர், மாணிக்கவாசகர் திருவருளாலும், ஆளுடைய நாயகர் திருவருளாலும் கட்டி முடிந்ததே யன்றி என்னுலியன்றதன்று என்று கூறுகின்றார். ஆகவே இது மாணிக்கவாசகர் கட்டி முடித்ததன்று.

இம் மண்டபம் கட்டுவித்ததின் பயன்:-வேடம் போட்டு நடித்து மாந்தர்க்கு நல்லறிவு கொளுத்துதற் பொருட்டும், கதாகாலட்சேபம் செய்தற்கும் நாட்டிய மாதர் ஆடுதற்கும், பாட்டுக் கச்சேரி நடத்துதற்கும் ஆகும், இச் செய்தியை இரண்டாம் பாடல் தெரிவிக்கின்றது. இம் மண்டபம் கட்டி முடிக்கப்பெற்ற காலம் கி. பி. 1602 அதாவது இற்றைக்கு 352 ஆண்டுகள் ஆகின்றன.

குறிப்புரை

இரண்டாம் பாடல்:—கோடிக்கை-வேஷம் போடல். கோடியர்-கூத்தாடுவோர் "கோடியர் நீர்மைபோல" (புறம்). கோமளக் கோதையர்களாகிய மடமாதர் ஆடிக் கைகாட்டும் கனகசபை எனவும், ஆயிழையாராகிய நாரியர் பாடிக் கைகாட்டுங் கனகசபை யெனவும் கொண்டுகூட்டுக. இளம்பெண் ஆடுவது அக்காலத்தேயுங் கொள்க. ஆடிக் கைகாட்டல்-நாட்டியக்குறிப்பு. பாடிக் (கை காட்டல்) தம் கைவரிசையை (சாமர்த்தியத்தைக்) காட்டல். வேடிக்கையாக-விளையாட்டுப் போல. மிக எளிதில் அரிய வேலைப்பாட்டை முற்றுவித்தான் வேலவன்; உலகைப் படைத் தளித்தல் இறைவனுக்கு விளையாட்டு என்பது போல.

மூன்று, நான்கு ஐந்து பாடலிறுதியிலும் முகித்தான் என வந்துளது. முடித்தான், ஒழித்தானென அமங்கலச் சொல் ஆமென்று கருதிப்போலும் முகித்தான் என்று வழங்கியுள்ளது. இது தெலுங்கு மொழி.

நான்காம் பாடல்:—பங்குனி-நீட்டல் விகாரம். பேச்சுவழக்கில் அக் காலத்தில் இருந்திருக்கலாம்போலும். ஆனி அடி யிடாதே கூனி குடிப் போகாதே என வழங்கும். ஆனி அஸ்திவாரம் நாட்டலாகாது; பங்குனி மாதம் புதுவீடு குடிப்போகக் கூடாதென்பது அதன் கருத்து.

தமிழ்ச் சௌந்தரியலகரி ஆராய்ச்சி

திரு. பண்டித-இராமசுப்பிரமணிய நாவலரவர்கள்,
செந்தமிழ் நிலையம், தக்கலை.

(320-ம் பக்கத் தொடர்ச்சி)

22-வது பாட்டில் முன்னிரண்டடிக் கருத்து மிக வேறுபட்டுக் காணப்படுகின்றதாகையால், அக் கருத்துக்கு ஏற்றதொருபாடம் வடமொழியில் இருக்கவேண்டும் என்றாவது, பிரமாதிராயர் வடமொழிப் பாட்டை அக் கருத்துப்பட விரித்துரைத்தார் என்றாவது கொள்ளவேண்டும்.

'பவாநி த்வம் தாஸே' என்று தொடங்குவது, "பவாநி! உன் அடியவனை என்னிடத்து உன் அருட்கடைக்கண் நோக்கு அருள்வாய்" என்று இவ்வாறு துதிக்கவிரும்பும் யாவன், 'பவாநி! உன்' என்று கூறுகின்றபொழுதே, அவனுக்கு நீ முகுந்த பிரமேந்திரர்களுடைய மகுடங்களால் நன்கு நீராசனஞ்செய்யப்பட்ட பாதங்களுடன்கூடிய உனது சாயுச்சிய பதவியை அளிக்கின்றாய்" என்னுங் கருத்துடையது.

பேரு றங்கயி லாசன்ம கன்பெற
　　பேர னன்புறு பேரனெ னுஞ்சொலால்
வார மன்பொடு பார்வைவ ழங்கென
　　வாய்தி றந்திட வோடிவ ழங்கினும்
வேரி முண்டகன் மால்மகு டங்களின்
　　வீச ரும்பரபை நிபமு வந்ததாள்
சேரு நன்பெரு வாழ்வும்வ ழங்குவை
　　தேட ருஞ்சிவ மாயம தங்கியே.

என்னும் கவிராசர் பாட்டை மேற்கூறிய கருத்துடன் ஒருங்கு நோக்கி வேற்றுமை அறிக.

25-வது பாட்டு வடமொழிப் பாட்டின் கருத்தைச் சிறிது விளக்கிக் கூறுகிறது.

26-வது பாட்டில் 'பிரமனாதியர் அழியவும் சிவன் அழியாதிருக்கின்றான்' என்று வடமொழிப் பாடற் கருத்தைக் கூறிய ஆசிரியர்,

அவ்வாறு சிவன் அழியாமைக்குத் தேவியின் மங்கல நாணின் திறல் காரணமாமென அக் கருத்தை விளக்குகின்றார்.

27-வது பாட்டில் 'அழிவறும் பதம் வைத்தருள் பேரொளி, யளிவிளைந்து களிப்பெழு நாதமே' என்பது ஆசிரியர் சேர்த்தது.

28-வது பாட்டில் '(நின்) பொன்னுலையின் வாசி' என்னுந் தொடரில் 'வாசி' என்பதற்குப் 'பெருமை' என்று பொருள் கூறுவது சிறக்கும். உரையாசிரியர் 'நன்மை' என்று பொருள் உரைத்தார். 'தாடங்க மஹிமா' என்று வடமொழிப் பாட்டில் உள்ளது.

29-வது பாட்டில் தனித் தொடர்களை ஆசிரியர் ஒரு தொடராக்கினர். 26-வது பாட்டிலும் ஆசிரியர் இம்முறையே தழுவினர். 'பவநம் உப தாதஸ்ய' (வீட்டுக்கு மீளுகின்ற சிவனை எதிர்கொள்ளும் பொருட்டு) என்பதனை 'உனதருகு வருமரனை எதிர்கொள' என ஆசிரியர் மொழிபெயர்த்தனர். 'உக்தி விஜயதே' என்பதை 'மொழி தழைகவே' என வியங்கோளாக உரைத்துளார். '(தேவி! நீ) செல்லும் பொழுது பிரமாவின் கிரீடத்தை நீக்கு (இன்றேல் நின் காலில் தாக்கும்), திருமாலின் முடியில் உன் பாதம் தாக்குகிறது (கவனமாய் நடக்க)' என்றாற் போலத் தேவி செல்லும் பொழுது அவள் பாதங்கள் அவளைப் பணிகின்ற பிரமாதிகளின் முடிகளில் தாக்குமென்பதைத் தனித் தொடர்களாகக் கூறும் வடமொழிப் பாட்டின் ஒழுக்கை மாற்றி, ஆசிரியர்

'இது பிரமன் மகுடமரி மகுடமிது குலிசன்முடி
இதுகடின மிடறு மிருதாள்'

எனக் கூறியது மிக நயந்தருவ தொன்றாம்.

30-வது பாட்டில் வாமகேசுவர தந்திரத்தைத் தேவியின் வற்புறுத்தலின் மேல் சிவன் கூறினான் என்பதை விளக்கும், 'த்வந்நிர்ப்பந்தாத்' என்று தொடங்குவதை, 'உனதேவலால் இதுதானளித்ததுவும் விமலையுன துரிமை யலவோ?' என ஆசிரியர் மொழிபெயர்த்துள்ளார். 'ஏவல்' என்பதற்கு மாறாக 'வன்புறை' என்பதையோ, அப் பொருள் படுவதொரு பிறிது மொழியோ அமைந்திருப்பின் நன்றாம்.

[தொடரும்]

சமய வாழ்வு

திரு. மா. இளையபெருமாள் அவர்கள், B. A. Hons. திருவகத்தபுரம்.

ஞாயிற்றுக்கிழமை-மனிதசமூகத்தின் தொழிலாள இனத்திற்கு உடல் உழைப்பின் அளவிலே ஓய்வுநாள். மாலை நேரத்தில் உலவச்செல்கிறோம். ஆலையில் பணிபுரியும் தொழிலாள நண்பன் ஒருவனைச்சந்திக்கிறோம். வாடிய முகம், மாசடைந்த உடல்; அணிந்திருக்கும் சட்டை 'சில்க்' ஆனாலும், பலநாளும் சேர அணிய அழுக்கடைந்திருக்கிறது; சில இடங்களில் கிழிந்தும் இருக்கிறது. அவனது வீட்டிற்குச் செல்கிறோம். அவன் மனைவி வருத்தத்தோடும் கோபத்தோடும் காட்சியளிக்கிறாள். சரியான முகமலர்ச்சியில்லை. அவனது குழந்தை மாதத்தின் முதல்பாதி நாட்களில் 'ஹார்லிக்ஸ்' தான் சாப்பிடும். மற்றப்பாதி நாட்களில் பாலும் சரியாகக் கிடையாது. மாதத்தின் இறுதிப்பாதி கடன் படுவதிலும் கவலைப்படுவதிலும் கழிகிறது. அவன் மாதம் சம்பாதிப்பது தொண்ணூறு ரூபாய்.

அவன் வீட்டிற்குப் பக்கத்துவீடு. அங்கே ஒரு ஆரம்ப ஆசிரியர் வாழ்கிறார். அவருக்கும் அதே சம்பளம். அவர் வீட்டிற்கும் செல்கிறோம். சிறிய வீடானாலும் எளிய முறையில் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. சிக்கனமாக, ஆனால் செம்மையாக வாழ்கின்ற குடும்பம். எல்லோர்க்கும் எளிய தூய உடைகள். நமக்கு ஏற்றமுறையில் உபசரிப்பு. மகிழ்ச்சி. ஏனைய சமூகத்தொடர்புகளும் தங்கள் நிலைக்கு ஏற்ற முறையில் அமைத்து அமைதியாக வாழ்கிறார்கள்.

ஆலைத் தொழிலாளிக்கும் ஆரம்பஆசிரியருக்கும் சரியானவாழ்வு நடத்தச் சம்பளம் போதாதுதான். இந்தப் பொருளாதாரநிலை சீர்பட வேண்டும் என்ற எண்ணம் இருவருக்கும் இருக்கிறது. ஆனால் இருவர் வாழ்விலும் வேற்றுமை தோன்றுகிறது. காரணம்?

ஆலைத்தொழிலாளி மாதத்தின் முன்பாதி நாட்களிலே சிறந்த வாழ்வு வாழ்வதாக எண்ணிக்கொண்டு பேய்வாழ்வு வாழ்கிறான். நிலைக்குமிஞ்சிய உணவுவகைகளை அவன்வீட்டிலே காண்கிறோம். அதே போலத்தான் உடை முதலியவற்றிலும் ஆடம்பரச் செலவுகள் அதிகமாக அமைந்திருக்கின்றன. ஆனால் மாதத்தின் பின்பாதியிலே இல்லா வாழ்வு-கடன்படும் வாழ்வு-வாழ்கிறான். பேய்வாழ்விலே களிப்பு-இல்லா வாழ்விலே வறுமை. இரண்டிலும் இன்பமில்லை.

ஆரம்பஆசிரியர் தமது வருவாயை வகைப்படுத்தி மாதம் முழுதும் செலவிடுகிறார். தமது வருவாய்க்குத் தகுந்த முறையில் தம் வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொள்கிறார். அவரது வாழ்வு பொருளாதாரத்தைப் பொறுத்த அளவில் திருப்திகரமாக அமைகிறது. ஆனால் ஆலைத்தொழிலாளியின் வாழ்விலே மாதந்தோறும் கடன்படுதலும் தீர்த்தலும்! எனவே எப்பொழுதும் வறுமைப் பாட்டுக் கேட்கிறது அவன் வீட்டில்!

தெருவிலே பிச்சைக்காரன் வாடி வதங்கி நிற்கும்போது 'அந் நிலைக்கு அவன் குற்றவாளியல்ல; நமது நாட்டுப் பொருளாதார நிலை இன்னும் சீர்படவில்லை' என்று முடிவுக்கு வருகிறோம். ஆனால் அதே தெருவிலே ஒரு கைதி விலங்கிடப்பட்டுப் போலீசாரால் இழுத்துச் செல்லப்படுகிறான். பிச்சைக்காரனைப்பற்றி வருந்தி நினைப்பது போல, நாம் சாதாரணமாக இந்தக் கைதியைப்பற்றி நினைப்பதில்லை. அவன் என்ன செய்தான் என்று தெரிவதிலே நம் ஆர்வம் செல்கிறது. அவன் கொடுமை, வஞ்சகம் நிறைந்த ஒரு கொலைவழக்கில் ஈடுபட்டிருப்பதாக அறிகிறோம். அதனைப்பற்றி நன்றாக அறியும்போது அவன்செய்த கொடுமையை, வஞ்சனையை, சதியை நினைத்து அக் கொடியவனுக்கு உரியகதிதான் சிறை என்ற முடிவுக்கு வருகிறோம். அவனை நம் நண்பனாக, உறவினனாக எண்ணிப் பார்த்தால் அவன் வாழ்வு முழுவதையும் ஒருமுறை நம் மனத்திரைக்குக் கொண்டுவர முடியும். ஏன் அவன் வாழ்விலே இது நடந்தது?

கைதி பிறக்கும்போதே வஞ்சகத்தின் வடிவமாகப் பிறக்கவில்லை; கொடுமையின் சின்னமாகத் தோன்றவில்லை. ஏனைய மனிதர்களைப் போலத்தான் தோன்றி வாழ்ந்தான். அவனது வாழ்வில் வறுமையும் இல்லை, பின் ஏன் அவனுக்கு இந்த நிலை? நினைத்துப் பார்த்தால் ஆலைத் தொழிலாளியின் வறுமைக்கு என்ன காரணமோ, அதே காரணம் தான் கைதியின் நிலைக்கும். கைதியினிடத்திலும் நேர்மைக் குணம் இருக்கிறது. இரக்க உணர்ச்சி இருக்கிறது. மனிதப்பண்பும் இருக்கத்தான் செய்கிறது. இருந்தும் அவையனைத்தும் அவன்வாழ்வில் பயன்படவில்லை. ஆலைத்தொழிலாளிக்குச் சம்பளம் இருந்தும் வறுமையால் வருந்துவது போலத்தான் கைதியும் நற்குணங்கள் படைக்கப்பெற்றிருந்தும் கொடுமையின் வடிவமானான். ஆலைத்தொழிலாளியின் வறுமைக்குக்காரணம் அவனது பொருளியல் வாழ்விலே ஒரு ஒழுங்கு-கட்டுப்பாடு-நேர்மை இல்லாமல் போனதுதான். அதுபோலத்

தான் கைதியின் அகவாழ்விலே ஒரு ஒழுங்கு-நேர்மை-கட்டுப்பாடு இல்லாததன் காரணம்தான் அவன் வஞ்சகத்தின் சின்னமானான். ஆலைத்தொழிலாளி தன்னுடைய வருவாய் எவ்வளவு? அதனை எவ்வாறு மட்டுப்படுத்தி வாழவேண்டும்? என்று எண்ணிப்பார்க்காது வாழ்வது போலத்தான் கைதியும் தன்னிடமுள்ள உணர்ச்சிகளை மட்டுப்படுத்தியதில்லை. ஆலைத்தொழிலாளி 'சம்பளம் போதாக்குறை' என்னும் பெயரால் வறுமையை வரவழைப்பதுபோல, கைதி தன் உணர்ச்சிகளின் பெயரால் கொடுமையை வரவழைத்துக் கொண்டான்.

இவர்களிருவரையும் இன்றைய சமூகத்தின் பிரதிநிதிகளாகக் கொள்ளவேண்டிய நிலையிலிருக்கிறது, நம் சமூகநிலை. புறவாழ்வும் அகவாழ்வும் ஒழுங்கற்றிருக்கின்றன. புறவாழ்விலே 'பொருளில்லை பொருளில்லை' என்று அலறி ஓடி உழைத்து வாடி வதங்கும் கூட்டம். அவ்வாழ்விலே 'இன்பமில்லை, அமைதியில்லை' என்று ஓடி வருந்தும் கூட்டம். சுருக்கக்கூறினால் இருவாழ்விலும் இன்பமில்லை. புறவாழ்விலே வறுமை-அதன் பயன் பட்டினியும் நேர்மையின்மையும் பிச்சைக்காரக் கும்பலும்: அகவாழ்விலே வெறி-அதன் பயன்தான் ஒழுங்கற்ற குடும்ப நிலையும் சிறைக் கூடங்களும். பட்டினியையும் பிச்சைக்காரக் கும்பலையும்போக்க, புறவாழ்வைச் சீர்படுத்த, அரசியல்உருவில் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் அகவாழ்வைச் சீர்படுத்த, வெறிவாழ்வை மாற்ற, ஒழுங்கற்ற நிலையையும் சிறைக்கூடங்களையும் ஒழிக்க இன்று முயற்சி இல்லை. அந்தப் பெரும் பணியை மனிதசமூகம் அறிவுபெற்ற நாள்தொட்டு இன்றுவரை செய்துவருவதுதான் சமயம் என்னும் சான்றோர் கண்ட நெறி.

இன்று சமயங்களுக்கு எதிராக விளங்கும் கூட்டம் உலகில் இரண்டேதான். 'பொருளாதார வாழ்வு சீர்பட்டால் வாழ்வு பூரணத்துவம் பெற்றுவிடும்; எனவே சமயம் ஒரு போதைப்பொருள்; அவசியமில்லை' என்று பேசும் பொருளியல் கூட்டம் ஒன்று. 'சமயம் சழக்கர்களின் சதிகார நிலையமாகிவிட்டது; காமுகர்களின் கூடாரமாகிவிட்டது; ஆதலால் அது ஒழிக்கப்பட வேண்டும்' என்று பேசும் நாத்திகக் கூட்டம் மற்றொன்று. இந்த இரண்டு கூட்டங்களும், சமயங்களைப் போல, மனிதவாழ்வின் நன்மையையே நாடுகின்றன. ஆதலால் அவைகள் காட்டும் ஒளியின் உதவிகொண்டு உலகியலை நோக்கினால்கூட சமயத்தின் முக்கியத்துவத்தை நாம் உணர முடியும்.

உலகில் எந்தச் சமயமும் பொருளியல் வாழ்வு சீர்படு வதை அவசியமற்றது என்று பேசவில்லை. அதுபோலவே சமயக் கொள்கைகள் நடைமுறைக்கு வரும்போது காலப்போக்கில் ஏற்படுகின்ற மாசை அகற்ற வேண்டாம் என்றும் கூறவில்லை. ஆனால் பொருளியல் சீர்படவேண்டும் என்பதற்காக, மாசு படிந்துவிட்டது என்ற காரணத்திற்காக 'சமயம் ஒழிக்கப்பட வேண்டும்' என்று சொல்வது விந்தையாகத் தோன்றுகிறதல்லவா? பொருளியல்கூட்டத்தின் இலட்சியமான 'எல்லோருக்கும் நல் வாழ்வு' என்பது, சமயத்தின் இலட்சியங்களில் ஒன்றுதான். தாயுமானவரும் தமது பராபரக் கண்ணியில் எல்லோரும் இன்புற்றிருத்தலே சமயத்தின்நோக்கமென அதன் பிரதிநிதிஎன்ற நிலையில் கூறுகிறார். ஆனால் பொருளியல் கூட்டத்தின் மறைமுகமான, இறுதிப்படியான எதேச்சாதிகாரம் அல்லது அடிமை வாழ்வு, எல்லோராலும் வெறுக்கப்படுவது மட்டுமல்ல; சமயத்தில் இறுதி இலட்சியமான 'விடுதலை அல்லது வீடு பேற்றின்' எதிரியாக அமைகிறது. இதனால்தான் பொருளியல்கூட்டம் சமயவாழ்வில் குறுக்கிடுகிறது. 'மாசுபடிந்திருப்பதால் சமயம் ஒழிக்கப்பட வேண்டும்' என்னும் கூட்டத்திற்கு மிகஎளிதாகப் பதில்கூறி விடலாம். ஒரு கொள்கையைத் தினசரி வாழ்வில் கொண்டுவரும்போது ஏற்படும் குறைகளால், அந்தக் கொள்கை குற்றமுடையதாகி விடாது. வாழ்க்கைக்கு விளக்காக இருக்கவேண்டிய கல்வி, இன்று ஒரு சாரா ரின் வாழ்வாக மாறி வணிகப் பொருளாக ஆகிவிட்டதின் காரணமாகக் கல்வியே வேண்டாமென்று யாராவது பேசுகின்றார்களா? நடுநிலைமைக் கும் நேர்மைக்கும் நீதிக்கும் உறைவிடமான நீதிமன்றங்கள், பலபல நாடுகளில், பலபல சமயங்களில் சந்தர்ப்பத்திற்கும் அரசியலுக்கும் ஏற்ற முறையில் நேர்மை குன்றிப் போகிறதே; அதற்காக நீதிமன்றங்கள் ஒழியவேண்டும் என்று யாராவது பேசுகின்றார்களா? மக்களின் உயிராகவும் உடலாகவும் கருதப்பட்ட அரசியல், இன்று பதவிப் பித்தர்களின் கூடாரமாக மாறி, உலக அரங்கிலே வெறியர்களின் பேயாட்டமாக உருவெடுத்து, இன்று மக்களினத்தையே அழிக்குமளவுக்கு ஆகிவிட்டதே; அதற்காக அரசியலே ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசுகின்றோமா? 'புனிதமானது' என்று எல்லோராலும் போற்றப்படுகின்ற கலையின் ஒரு பகுதி இன்று நம் நாட்டின் ஒரு சாராரின் காமக் கூடமாக மாறிவிட்டதே; அதற்காகக் கலை ஒழியவேண்டும் என்று கூறுகின்றார்களா? இல்லையே. அது போலத்தான் மக்களின் அகவாழ்வைச்

சீர்திருத்தி ஒரு ஒழுக்குப் பயிற்சியைத்தந்து உய்விக்க எழுந்தது சமயம். பலசமயங்களில் சூழ்ச்சிக்காரர்களின் கையிலும் அறிவற்றவர்கள் கையிலும் புகுந்து மாசுபட்டுவிட்டதால் 'சமயம் ஒழிக்கப்பட வேண்டும்' என்று பேசுவது, முகத்திலே பருத் தோன்றினால் தலையையே வெட்டிஎறிந்துவிட வேண்டும் என்று பேசுவதுபோலும். அது பரிகசிக்கத்தக்க அறியாமை மட்டுமல்ல, பகுத்தறிவிற்கும் பொருந்தாது போகின்றது.

இன்று நாம்எல்லோரும் மறுமலர்ச்சியை நம்புகின்றோம். காலத்தை ஒட்டி வளர்ந்த மாசை அகற்றிப் புதுவாழ்வு பெறுவதுதானே மறுமலர்ச்சி. வாழ்க்கை என்றால் ஒரு உயர்ந்த இலட்சியம் வேண்டும். 'குறிக்கோள் இல்லாத வாழ்வு, வாழ்வாகாது' என்பது நாம் எல்லோரும் இன்று பேசுவது. இவ் வுலகில் வாழ்கின்ற ஒவ்வொருவனுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு, ஏற்ற துணை, வாழ்வுக்கு வேண்டிய பொருள்கள், மன மகிழ்ச்சி, அமைதி ஆகியவை வேண்டும். அந்தநிலை ஏற்படாதவரை சமூகத்தில் நேர்மை, நீதி இருக்கமுடியாது. பொய், வஞ்சகம், கொலை முதலியன ஏற்பட்டுக்கொண்டே யிருக்கும். ஆகவே 'எல்லோர்க்கும் நல்வாழ்வு கிடைக்கும்வகையில் உள்ள நிலையை ஆக்குவதுதான் ஒவ்வொரு மனிதனுடையவும் குறிக்கோளாக இருக்க வேண்டும்' என்பது இன்று நம்மிடையில் பழக்கப்பட்டு வந்த ஒரு பேச்சு. இந்தக் குறிக்கோள் மேடைகள்தோறும் முழக்கப்படுகின்றன. மாநாடுகள் தோறும் பலமணி நேரங்கள் பேசப்படுகின்றன. வரவேற்புரையில் தொடங்கி வாழ்த்துரையில் முடிகின்ற ஒலிபெருக்கி முழக்கங்களெல்லாம் ஓயும்போது இலட்சியத்திற்குச் சாதகமான பயன் யாதுமற்றுப் போகின்றன. எத்தனையோ கூட்டங்கள், கூட்டங்கள் தோறும் தலைவர்கள், தேநீர் விருந்துகள், 'ஆர்வம் வேண்டும், அறிவு வேண்டும், உள்ளம் வேண்டும்' என்ற முழக்கங்கள், சமூகச் சீர்திருத்த நாடகங்கள், புகழ் மாலைகள், நன்றி கூறல்கள் இவைகளோடு மாநாடுகள் முடிவடைந்து விடுகின்றன. இவற்றால் பயன்? பேசப்படுகின்ற அளவில் யாதுமே கிடையாது - ஏற்படவில்லை என்பது நாம் கண்கூடாகக் காண்பது. காரணம், சீர்திருத்தத்திற்குப் பேச்சாளரும் எழுத்தாளரும் மட்டும் போதாது. இவர்கள் பேசுவதும் எழுதுவதும் வெறும் சட்டங்கள். அதனை நடைமுறையில் நடத்திக்காட்டும் தலைவர்கள் தேவை. பெரும்பான்மையான தலைவர்களிடத்தில் இந்த ஒரு பண்புதானே குறை; அவர்களுடைய பேச்செல்லாம் பாத்தைமை வாழ்வு வாழ்ந்து

கொண்டிருக்கும் ஒருத்தி கற்பைப்பற்றி வானளாவப் பேசுவதாகவே முடிகின்றது.

இந்தத் தலைவர்கள் பேசுகின்ற பேச்செல்லாம் நமது பண்டைய ஒழுக்க நூல்களில் காணப்படும் உண்மைகள்தாம். எழுதுபவை யெல்லாம் பழைய காவியங்கள் வற்புறுத்தும் கொள்கைகள் தாம். ஆனால் இவைகள் வெறும் சட்டங்கள். ஆட்சி ஒழுங்குபெற நடைபெறவேண்டுமானால் சட்டங்கள்மட்டும் போதா; நடைமுறையில் கொண்டுவர ஆட்சியாளர் வேண்டும்; அதுபோலத்தான் அகவாழ்விலும். திருக்குறள் போன்ற உயர்ந்த நூல்கள் கூறும் உண்மைகளை வாழ்வில் பயன்படுத்த எல்லோரையும் ஆக்கும் பயிற்சிக் கூடங்களே சமயங்கள்.

மனிதவாழ்வைப் பற்றி விழித்தநிலையில் சிந்தித்து அதன் பயனை உணர்ந்த பயன்தானே சமயம். பிறக்கின்ற மனிதன் இறக்கின்ற நிலைவரையிலும் உணர்ந்து அவன் வாழ்நாளில் அனுபவித்த இன்பதுன்ப உணர்ச்சிகளையும் நிலைகளையும் ஒன்றுவிடாது பரிபூரணமாக ஆராய்ந்து நம் முன்னோர்கள் வகுத்த நெறிதானே சமயம். அவர்கள் வாழ்ந்து காட்டிய கொள்கைகள்தானே சமய நெறிகள். அவர்கள் ஏனைய மனிதர்களுக்குக் கொடுத்த ஒழுக்கப் பயிற்சிகள்தானே சமய ஆசாரங்கள். உலகிலுள்ள சமயங்களை எல்லாம் எண்ணிப்பார்த்தால் இந்தஉண்மை நன்குவிளங்கும். உலகின் கொடுமைகளை எண்ணி நைந்த புத்தர் அஹிம்சை வாழ்வு வாழ்ந்து காட்டினார். பகைவர் கொடுமைக் காளாகிய ஏசு அன்பு வாழ்வு வாழ்ந்து காட்டினார். அவைகளை வற்புறுத்துகின்றார் நபி. இவர்கள் நிறுவிய சமயங்களின் கொள்கைகள், சமூகத்தொண்டைத்தவிர எதனை வற்புறுத்த முடியும்? வைணவ, சைவசமயங்கள், தீமை ஒழிதலையும் அன்பையும் தானே வற்புறுத்துகின்றன.

தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனும் திருந்திவிட்டால் சமூகம் நலனடையும் என்பது நம் முன்னோர்கண்ட சமூக அடிப்படை. எனவேதான் நமது நூல்களெல்லாம் நற்பண்புகளை வற்புறுத்தும்போது அதனால் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் நன்மைகளையும் அந்த நற்பண்புகள் இல்லாவிட்டால் நேரும் தீமைகளையும் எடுத்துக் காட்டுகின்றன எடுத்துக் காட்டாகத் திருக்குறளைக் கூறலாம். திருவள்ளுவரும் இதே முறையைத்தான் கையாள்கிறார். பிறருக்குத் தீமை பயக்கும் வினையைச் செய்யாதே என்னும் போதும் நன்மை பயக்கும் வினையைச்

செய் என்னும் போதும் செய்பவனுக்கு ஏற்படும் நன்மை தீமைகளைப் பற்றிப் பேசுகின்றாரே யல்லாது பிறருக்கும் ஏற்படும் உணர்ச்சிகளைப் பற்றிப் பேசுவதில்லை. தீவினையச்சத்தை வற்புறுத்தும்போது "பெரியோர் தீவினையைச் செய்ய அஞ்சுவர்; அவை தீய தனக்குப் பயக்கும்; தீவினை செய்யாமை அறிவினுள் எல்லாம் தலை; செய்தால் அறம் கேடு சூழும்; இல்லாதவன் ஆகிவிடுவான்; பாவம் வரும்; நீங்காது கொல்லும்; கெடுதல் நிச்சயம்; தன்னை விரும்புவானாயின் செய்யாதொழிக; தீவினை செய்யாவிடின் கேடற்றவன்'' என்று பேசுகின்றார். பிறருக்குத் தீவினை செய்தால் பிறருக்கு ஏற்படும் தீமைகளைப் பற்றியோ, அவர்கள் உள்ளம் வருந்துவதைப் பற்றியோ சொல்லித் தடுக்கவில்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால் எந்த நற்பண்பையும் 'சமூகப் பணி' யாகச் சொல்லவேயில்லை. ஆனால் தனிப்பட்டவனின் கடமையாகப் பேசுகிறார்.

இந்த முறையையே பின்பற்றித் தனிப்பட்ட மனிதனது அக வாழ்வை ஒழுங்குபடுத்தப் பயிற்சிகொடுத்து வந்தன நமது நாட்டுச் சமயங்கள். குறிப்பாக, சைவசமயம் பரப்பும் நெறி தனிமனிதன் வாழ வேண்டிய அன்பு நெறியே.

சமயங்கள் வளர்த்த சமூகத்தொண்டிற்கும் இன்றைய மறுமலர்ச்சிக்கும் மற்றொரு வேறுபாடு உண்டு. இன்றைய மறுமலர்ச்சி வெறும் பேச்சளவிலும் உடையளவிலும் இருப்பதால் ஒரு இலட்சியத்தை வாழ்விலே கொண்டுவர இடையூறாய் இருப்பனவற்றைப் பற்றிக் கருதுவதில்லை. சமயங்கள் கருதின. மனிதவாழ்வு வெறும் இலட்சியம்மட்டுமல்ல; அவனது உயிர்த் தேவை, உடல் தேவை, உணர்வுலகம், இன்பம், துன்பம் ஆகிய எத்தனையோ வகைப் பொருள்களைக் கொண்டது. ஒரு நல்ல பண்பைச் செயல்படுத்தும்போது எத்தனையோ தீயபண்புகள் எதிர்த்து நிற்கும். அவைகளை அழித்துத் தன் இலட்சியத்தை நடைமுறைக்குக் கொண்டுவரப் பெரும் போராட்டம் நிகழ்த்தவேண்டியிருக்கும். சில சமயங்களில் ஒரு நற்பண்புக்கு எதிராக இன்னொரு நற்பண்பே வரும். அப்போது எதனைக் கொள்வது, கைவிடுவது என்பன போன்ற பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டும். சைவ அடியார்களது வாழ்விலே இத்தகைய போராட்டங்களைக் காண்கிறோம்.

சுந்தரர் வாழ்விலே மனைவியின்பால் கொள்ளும் அன்புக்கும் இறைவன்பால் கொள்ளும் அன்புக்கும் போராட்டம் நிகழ்கிறது.

அதன் பயன்தான்,'அவர் கண் பார்வை இழத்தலும் அடைதலும். திருநீலகண்டர் வாழ்வில் இறைவன் போரால் செய்த சபதத்திற்கும், தன் கள்ளமின்மையை விளக்கும் முறைக்கும் போராட்டம் நிகழ்கிறது. தன் மான உணர்ச்சியையும் வென்றுநின்ற கடவுளன்புதானே இயற்பகையாரின் வாழ்வு? விருந்தோம்பலின் சிறப்பை விளக்குவது தானே இளையான்குடிமாறனார் வாழ்வும், சிறுத்தொண்டர் வாழ்வும். வாளால் வெட்டுண்டபோதும், பகைவனை மன்னித்துக் காத்த பெருமையைத்தானே மெய்ப்பொருள் நாயனார் வாழ்வு விளக்குகிறது. இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் என்பது அவர் வாழ்வில் நடத்திக்காட்டிய உண்மை. தீயசக்தியை ஒழித்துக்கட்டும் வாழ்வன்றே எறிபத்தர் வாழ்ந்தது. ஏனாதிநாயனார் சிவச்சின்னங்கண்டு உயிரை அர்ப்பணித்ததும், கண்ணப்பன் சிவனுக்காகக் கண்களை இழந்ததும் தியாக வாழ்வல்லவா. உள்ளத்தை உருக்கும் இசையின் பெருமையை விளக்குவதுதானே ஆனாய நாயனாரின் வாழ்வு. தொண்டு வாழ்க்கை வாழ்ந்த திருக்குறிப்புத் தொண்டர், தமது கடமையை நிறைவேற்றும் உணர்ச்சியின் விளைவுதானே, தலையைப் பாறையில் மோதச் சென்றது. சாதிவேற்றுமைகளை ஒழித்தன் விளைவுதானே திருநீலநக்கர் வாழ்வும், நமிநந்தியடிகள் வாழ்வும்.

எனவே அடியார்கள் வாழ்வெல்லாம் இன்று மறுமலர்ச்சியாளர்கள் பேசும் தொண்டுகளைத்தான் வற்புறுத்துகின்றன. மறுமலர்ச்சியாளர் பேச்சளவில் வைத்துக்கொள்கிறார்கள். அடியார்கள் வாழ்ந்துகாட்டியதாகப் பேசப்படுகின்றது. மனிதனை நோக்கி 'நீ வெறிவாழ்வு வாழாதே, நெறிவாழ்வு வாழ்வாயாக' என்று பேசுகின்றது சைவம். தான் வாழ்ந்த வெறிவாழ்வுக்கு வருந்தி வருந்திப் பாடுகின்ற அப்பரது உருக்கமன்றோ அவர் பாடல்களின் பெருமை? அவைகள் நம் உள்ளத்தைக் கவரும் தன்மை? மனிதனை நோக்கி 'நீ காமவாழ்க்கை வாழாதே' என்று பேசுவதுதானே அருணகிரியின் வாழ்வு. அன்பைக் காமமாக மாற்றாது, காதல்வாழ்வு வாழத் தூண்டுவதுதானே அடியவர்களின் வாழ்க்கை.

இவர்களில் பலரது வாழ்வில் காணும் துறவு என்பதன் பொருள் என்ன? இல்வாழ்வை விட்டு ஓடிப்போகச் சொல்வதன்று துறவு. ஒருவன் சமூகத்திற்குத் தொண்டு செய்யவேண்டும் என்று முன்வருகின்றான் என்று வைத்துக் கொள்ளுவோம். காலையிலிருந்து மாலை வரை தனக்கே பணிபுரியும் ஒருவன், தன்னையே காத்துக்கொள்ளும் ஒருவன், தன் இன்ப துன்பச் சிக்கலிலிருந்து என்றும் மீளாத ஒருவன், தனக்குப் பணிபுரிய எத்தனையோ ஏவலாளர்களைத் தேடும் ஒருவன் எவ்வாறு சமூகத்தொண்டைச் செய்ய முடியும்? தன், வாழ்வுப்படிக்கேற்ற முறையில் தேவைகளைக் குறைத்துக்கொள்ளும் மனப்பான்மை உடையவருக்குத்தானே பிறர்நலத்தைப்பற்றி எண்ண முடியும். இங்குத் தோன்றியதுதான் துறவு. "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல், அதனின் அதனின் இலன்'.

எனவே அன்பு வாழ்வும் அருள் வாழ்வும்தான் அடியார்கள் வாழ்வு. அது இயல்பான பல உணர்ச்சிகளை வென்றால்தான் வாழ முடிவது. இலட்சியத்தை அடைவது அல்லது நிறைவேற்றுவது மனிதவாழ்விலே எளிதன்று. நமது உள்ளம் அல்லது அறிவு நினைக்கின்ற இலட்சியத்திற்கும், நாம் காண்கின்ற உலகியலுக்கும் எவ்வளவோ வேற்றுமை. அழகு என்பதை ஒரு பொருளில் காணுகின்ற நமது உள்ளம் 'பரிபூரண அழகு' அல்லது நிலைத்த அழகு என்ற ஒன்றை இலட்சியமாக விரும்புகிறது. ஆனால் நிலையாமையுள்ள உலகில் அத்தகைய அழகைப் பெற முடிவதில்லை. இவ்வாறே பரிபூரண நன்மை, பரிபூரண உண்மை, பரிபூரண விடுதலை, பரிபூரண அமைதி போன்றவற்றை நமது உள்ளம் எதிர்பார்க்கிறது. மனத்தால் தொட முடிகிற அந்த உயர்ந்த இலட்சியம், குறையானதான இறுதியுள்ள பொருள்கள் நிறைந்த உலகியலில் காணக் கிடைப்பதில்லை. பிரித்துப் பார்த்தே எதனையும் உணர்ந்து பார்க்கும் பழக்கம் கொண்ட நம் அறிவுக்கு எதனையும் முழுமையாகப் பார்த்து அறிய முடியவில்லை. எனவே நமது இலட்சிய எண்ணங்களுக்கும் உண்மை நிகழ்ச்சிகளுக்கும் இடையே ஒரு பெருந் தொடர்பின்மையை உணர்கிறோம். இலட்சியத்

தைத் தேடுமாறு நம்மைத் தூண்டும் ஆன்ம ஆர்வத்திற்கும், வம்ச பரம்பரையாக நம்மைத் தொடரும் குறைத்தன்மைக்கும் ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்துகொண்டே யிருக்கிறது.

இந்தக் குறைவுத் தன்மையும், நிறைவுத் தன்மையும் ஒன்றை விட்டு ஒன்று விலகிச் சென்று விடுவதில்லை. ஆனால் சேர்ந்தும் ஒருமைப்பாடு அடைவதில்லை. அடிக்கடி தொட்டும் தொடாமலும் நிற்கின்றன. இந்த நிறைவுத் தன்மையோடு, ஒன்றுசேர்ந்து நிற்க நம் உணர்ச்சி பல சமயங்களில் ஒருப்படுவதில்லை. பயிற்சி பெற்றுப் பக்குவம் பெற்ற அறிவால், உணர்வால் நிறைவுத்தன்மையோடு சேர்ந்து குறைவுத் தன்மையை எதிர்க்கும் ஆற்றல் நமக்கு உண்டாகிறது. அந்தப் பயிற்சியை அளிப்பதுவும் சமயமே.

அந்த நிறைவுத் தன்மை எது? சமயம் வகுத்த கடவுள். நம்மிடம் அரைகுறையாகத் தோன்றும் நல்ல குணத்தின் நிறைவுதானே கடவுள். அழியும் அழகு நிறைந்த உலகிலே அழியா அழகைத் தேடி அலைந்ததின் பயன்தானே கடவுள். முதன்மையைத் தேடி அலைகின்ற நமது உள்ளம் கண்ட ஆதிபகவன்தானே கடவுள். குறையறிவும் பொய்யறிவும் கொண்ட நாம் கண்ட வாலறிவன்தானே கடவுள். விருப்பு வெறுப்பாலும் நல்வினை தீவினையாலும் நலியும் மனிதன் கண்ட வேண்டுதல் வேண்டாமையிலான்தானே கடவுள். ஐம்பொறியாலும் உள்ளத்தாலும் அறிவாலும் இன்பமடைகின்ற மனிதன் கண்ட இன்பக்களஞ்சியம், அறிவுச் சுரங்கம்தானே இறைவன். ஐம்பொறிகளாலும் உள்ளத்தாலும் அறிவாலும் துன்பமடைகின்றபோது மனிதன் வேண்டும் விடுதலையின் பூர்ணமுடிவான தனக்குவமை யில்லான்தானே இறைவன்.

அந்தப் பரிபூரண உண்மைக்குப் பணிவதுதான் கடவுள் வழிபாடு. அதனை நினைத்து உண்மையை நிலைநிறுத்தப் பாடுபடுவதுதான் கடவுள்தொண்டு. அந்தப் பரிபூரண நன்மையை வணங்குவதுதான் கடவுள் வழிபாடு. அதனை நினைத்து நன்மையையே செய்ய முற்படுவதுதான் கடவுள் தொண்டு. அந்தப் பரிபூரண கருணையின் வடிவே கடவுள். அதனை நினைந்து அதன் குறை நிலைகளான உயிர்கள் பால் கருணை செய்வது கடவுள்தொண்டு.

பரிபூரண நிலைமையை நினைத்துவழிபடுவது, பகுத்து உணரும் நம் அறிவிற்கு மிக எளிதான காரியமன்று. எனவேதான் அதற்கு வடிவம் கொடுத்து வழிபட்டனர் நம் முன்னோர்கள். இன்று மாநாடுகளில் படத்திற்கு மாலைபோட்டுத் திறப்பு விழாவும் பாராட்டுரையும் வழங்குகின்றோமே; காரணம் என்ன? சொல்லளவிலே நன்மை அல்லது தொண்டு செய்த தலைவருக்கே, 'அவாது அன்புக்குத் தலை வணங்குவோம்' என்று படத்தை நோக்கிப் பேசும்பொழுது, பரிபூரணத் தன்மைக்கு வடிவம் கொடுத்து வழிபட்டது, நம் அறிவு ஒத்துக்கொள்ளத் தகுந்தது தானே. எனவே உருவவழிபாட்டு மூலமாகக் கடவுள்பற்று மட்டுமல்ல; நமது நாட்டில் கலையும் பண்பாட்டுணர்ச்சியும் கடமை உணர்வும் வளர்ந்தது.

ஒரு சான்றோன் எழுதிய சிறந்த நூல் ஒன்றைக் கற்கிறான் ஒருவன். அதனைப் பலமுறை பயின்று அதன் கருத்துக்களை உணர்ந்து அது அவன் அறிவைத் திருத்தி அவன் வாழ்வுக்கு வழிகாட்டியாக இருப்பதால் அதனை அறிவுக் களஞ்சியம் என்று பாராட்டுகிறான். அதே புத்தகத்தை இன்னொருவன் பார்க்கிறான். அவனுக்குப் படிக்க முடியவில்லை. அது கூறும் உண்மைகளை விளங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த 'அறிவுக் களஞ்சியம்' அவனுக்கு வெறும் தாளிலே, அச்சுப் பொறியின் கிறுக்கல்களைத் தவிர வேறொன்றும் காண முடியவில்லை. எழுத்தைக் குறியீடாக வைத்து, அதனைக் கூட்டி ஒலிப்பதைச் சொல்லாக எண்ணிப் பயிற்சிபெற்ற உள்ளத்திற்குத் தான் அது அறிவுக்களஞ்சியம். இதேபோலத்தான் உருவ வழிபாடும்.

தில்லை நடராசனின் திருவுருவத்தை வைத்து, வழிபடுவதன் மூலம், அந்தப் பரிபூரணத்துவத்தை உணரும் பழக்கம் நமக்கும் ஏற்பட்டால், குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும், குமிழ் சிரிப்பும், பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே; என்று நாமும் பாடத்தான் செய்வோம். அதன் பொருளை நினைந்து, நினைந்து

உள்ளம் உருகி, உருகி, மெய்ப்பாடு தோன்ற நாமும் கண்ணீர் விடத் தான் செய்வோம்.

அருளின் முழுமையை உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். அதற்கு உருவம் அமைத்து வழிபட்டனர். கோயிலெடுத்துக் கலைவளர்த்தனர். அதற்கு வழிபாடு இயற்றுவதன் வாயிலாக அருளை உலகில் வளர்த்தனர்.

அழகின் முழுமையை உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். அதற்கு உருவம் அமைத்து வழிபட்டனர். கோவிலெடுத்துக் கலை வளர்த்தனர். அதற்கு வழிபாடு இயற்றுவதன் வாயிலாக அழகுணர்ச்சியை உலகில் வளர்த்தனர்.

ஆகவே வழிபாட்டின் மூலமாக அருளையும் அன்பையும் இன்பத்தையும் வளர்த்தவர்கள் நம் முன்னோர்கள். இன்று நம்மால் எடுக்க முடியாத கோவில்கள் எண்ணமுடியாத சிற்பங்கள், நினைக்க முடியாத சிந்தனைகள் எழுத முடியாத ஓவியங்கள் எல்லாம் நமது சமய வாழ்வின் பயன். நமது பண்பாடும் சமய வாழ்வின் பயன். நமது இலக்கியங்களெல்லாம் நம்முடைய சமயங்கள் தந்த செல்வங்களே.

எனவே சமயம், மனிதனது அகவாழ்வைச் சீர்படுத்தி இன்பமும் அமைதியும் நல்கும் பயிற்சிக் கூடம்; மனித இனத்தின் நல்வாழ்வு என்ற இலட்சியத்திற்கு ஒவ்வொரு தனி மனிதனையும் உழைக்குமாறு தூண்டிப் பயிற்சியளிக்கும் தொழிற்பள்ளி; மனித இனத்தின் சிறந்த ஆக்க வேலைகளாகிய கலை, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் உயிர் நிலை.

(9-5-54 ல் நெல்லை அருணகிரி இசைக்கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.)

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்

வித்துவான், ஆ. சிவலிங்கனுர் அவர்கள், விரிவுரையாளர்,
தமிழ்க் கல்லூரி, மயிலம்.

புனைவெழில் வடிவி னோர் பொதுமகட் கண்ட மைந்தன்
மனமெனப் புலவர் நெஞ்சம் மருளுமின் தமிழ்ப்பா மாலை
சினவிடை யவர்க்கே சாத்தும் சிவப்பிர காச னென்னும்
முனிவனெம் அடிகள் பாத முளரிகள் சென்னி சேர்ப்பாம்.

1. முன்னுரை

கற்பனைக்கொரு களஞ்சியமென விளங்குபவர் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் "விரைவிடை யிவரும் நினைப்பிற வாமை வேண்டுநர் வேண்டுக மதூரம், பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும் பிறவியே வேண்டுவன் தமியேன்" (சோணசைலமாலை 39.) எனத் திருவண்ணாமலை யிறைவனிடம் வேண்டியதற் கேற்பப் பல தமிழ்ச்சொல் மலர்கொண்டு நூல்மாலைகளை யிறைவனுக்குத் தொடுத் தணிந்தவர். இவருடைய கற்பனைகள் படித்துப்படித்து இன்புறுதற் குரியன. இவரைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் அல்லது நல்லாற் றூர்ச் சிவப்பிரகாசர் என்றழைப்பர் அறிஞர். இவர் காஞ்சியில் தோன்றினும், துறைமங்கலத்தில் அண்ணாமலை ரெட்டியாரால் போற்றப்பட்டுப் பெரிதும்தங்கியிருந்தமையால் துறைமங்கலம் சிவப் பிரகாசர் என்றும், நல்லாற்றூரில் இறையடி நீழல் எய்தியமையால் நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசர் என்றும் வழங்கப் பெற்றார். இங்ஙனம் ஊர்ப்பெயர் அடுத்துக் கூறப்படுவதால் ஒரு நன்மையுண்டு; அதாவது ஒரேபெயர் கொண்ட பலரைப் பிரித்துணர்தற்கு இயலுமதுவே. துறையூர்ச் சிவப்பிரகாசர், மதுரைச் சிவப்பிரகாசர், திருவாரூர்ச் சிவப்பிரகாசர், சிதம்பரம் சிவப்பிரகாசர், வள்ளல் சிவப்பிரகாசர் சிவப்பிரகாச துரை, சிவப்பிரகாச பண்டிதர் ஆகியவர்களின் வேறானவர் நம் சிவப்பிரகாசர் என்பதை நாம் அறியலாம்.

நம் அடிகளின் வரலாற்றினை உரை நடையில் முதன் முதலில் எழுதியவர், சிதம்பரம், ஈசானிய மடம் இராமலிங்கசுவாமிகள் ஆவர். இவர்கட்கு முன்னர்க் கேள்வியளவில் வரலாறு வழங்கியிருக்கவேண்டும். சேயூர்-ப. கந்தசாமித் தம்பிரான் பதிப்பித்த சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு முதலிய நூல்கள் அடங்கிய பதிப்பில் உரை நடையில் இவரது வரலாறு சிறிது மாறுபட எழுதப்பட்டுளது. செய்யுள் நடையில் முருகதாச அடிகளும், திருவோத்தூர்ப் பாநுகவி அடிகளும் இயற்றியுள்ளனர். பாநுகவியடிகள் இராமலிங்கசுவாமிகள் எழுதிய வரலாற்றொடு ஒத்துப் பாடியுள்ளனர். முருகதாச அடிகள் வரலாற்றினை முழுதும் கூறாது தெரிந்த அளவிற் சில கூறினர். ஈண்டு இராமலிங்க சுவாமிகள் எழுதிய வரலாற்றினை மாறுபாடின்றி யப்படியே எடுத்தெழுதிப் பிறர் வரலாறுகளில் ஆங்காங்கு காணப் படும் வேறுபாடுகளை மட்டும் சுட்டிச் செல்வோம்.

2. வரலாறு I

காஞ்சீபுரத்திலே ஏறக்குறைய இருநூற்றெண்பது வருடங்களுக்கு முன் தொண்டைமண்டல வேளாளர்க்குத் தீக்ஷாகுருவாகக் குமாரசுவாமி தேசிகர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருக்கார்த்திகைத் தரிசனத்திற்காகத் திருவண்ணுமலை யாத்திரைக்குப் புறப்பட்டு ஒரு நாள் வழியில் ஒரு நந்தன வனத்திறங்கிச் சிவபூசை முடித்து, அன்று சாயங்காலமே தாங் குறித்த அத் தலத்தையடைந்து அங்குள்ள ஈசானிய தீர்த்தத்திலே அநுட்டானஞ்செய்து கொண்டு, பூசைப் பேடகம் எங்கே என்று பரிசனங்களிடத்து வினவ அவர்கள், பகலிலே தங்கி யிருந்த இடத்தில் வைத்து மறந்து வந்ததாக அச்சத்தோடு விண்ணப்பம் செய்தனர். அதுகேட்டு, மனமிகக் கலக்க முற்று அப் பரிசனங்களைப் பகல் தங்கியிருந்த நந்தன வனம் வரையும் பரிசோதித்து வரும்படி அனுப்பிவிட்டுத் தாம் ஓரிடத்தில் போய், நம்முடைய ஆன்மார்த்தமாகிய உடையவரை விட்டுப் பிரியும்படி நேரிட்டதே! என்னும் வருத்தத்தால் அன்றிரவு முழுதும் நித்திரையின்றிச் சிவத்தியானம் செய்துகொண்டிருந்தனர். அத் தருணத்தில் அவரது சிவபுண்ணிய முதிர்ச்சியினாலே திருவண்ணுமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், ஒரு சங்கமத் திருவுருவங் கொண்டு அவரிடத்திற் கெழுந்தருளித் தம்மெதிர்

வந்து தமக்குநிகழ்ந்த ஆபத்தைத் தெரிவித்து அன்பொடு வணங்கி நின்ற அவர் மீது கிருபாநோக்கம் செய்து "நீர் அங்கம் வேறு இலிங்கம் வேறாக இருந்தமையால் இவ்வாறு பிரியும்படி நேரிட்டது; இலிங்காங்க சம்பந்தியா யிருந்தால் இவ் வண்ணம் நேரிடுதல் இயலாது; உமது பூசைப் பேடகம் நாளை யுதயத்தில் வந்து சேரும்; நீர் இது முதல் இலிங்க தாரணம் செய்து கொள்ளும்" என்று அநுக்கிரகிக்க, அவர் இச் செய்கை தமது சீடர் பந்துக்களுக்கு விரோதமாக இருக்கும் என்பதை விண்ணப்பித்து நின்றனர். அது கேட்ட சிவபெருமான், "அந்தச் சீடர் முதலியோரால் பெறப்படும் பயன் சிறிதுமில்லை, நமது கட்டளைப்படி நீர் சிவலிங்க தாரணம் செய்து கொண்டால் உமக்கு மூன்று புத்திரர்களும் ஒரு புத்திரியும் பிறப்பார்கள். அவர்களால் இம்மை மறுமை யின்பங்களும் முத்தியும் சித்திக்கும். ஆதலால் இவ் வாலயத்திற்குத் தெற்கு வீதியிலுள்ள மடத்திலிருக்கும் குருதேவரிடத்திலே தாரண தீக்ஷை செய்துகொள்ளும்" என்று வற்புறுத்தி ஆஞ்ஞாபித்து, வீரசைவ சமயாசாரங்களையும் போதித்து, அவ்வாறே குருதேவருக்கும் கட்டளையிட்டு மறைந்தருளினர்.

மறுநாட் காலையில் சிவபெருமானது திருவாக்கின்படியே பூசைப் பேடகம் வரப்பெற்று, ஸ்ரீகுருதேவரால் அனுப்பப்பட்ட அடியார்களோடு மடாலயத்தை யடைந்து, குருதேவரைத் தரிசித்து அவராலே தாரண தீக்ஷை செய்யப்பெற்றுத் திருக்கார்த்திகைத் திருவிழா நிறைவேறிய பின் குருதேவரிடத்திலே விடைபெற்றுக் கொண்டு காஞ்சிபுரத்துக்கு வந்து, தமது அநுட்டானப்படியே சீடர்களுக்குத் தாரண தீக்ஷை செய்துகொண்டிருக்க அக் காலத்திலே, அவருக்கு அண்ணாமலையார் அநுக்கிரகித்தபடியே மூன்று புத்திரர்களும் ஒரு புத்திரியும் அவதரித்தார்கள். தந்தையாராகிய குமாரசாமி தேசிகர் களிகூர்ந்து அவர்களுக்கு, முறையே சிவப்பிரகாசம், வேலாயுதம், கருணைப்பிரகாசம், ஞானாம்பிகை என்று நாமகரணம் தரித்து முதல் மூவரும் கல்வியிற் பயின்று வருங்காலத்தில் சிவலிங்க ஐக்கிய மாயினர்.

பின்பு மூத்தவராகிய சிவப்பிரகாச சுவாமிகள், தமது சகோதரர் முதலியவர்களோடு திருவண்ணுமலைக்குப் போய்க் குருதேவரைத் தரிசித்து அங்கே வாசஞ்செய்துகொண்டு, தமது கல்வி முயற்சியிற் றளராது வாழும் நாள்களுள் ஒருநாள், அந்தச் சோணசைலத்தைப் பிரதக்ஷிணம் செய்து வரும்போதே சோணசைல மாலை எனப் பெய ரிய நூறு செய்யுள்களால் அதனைத் தோத்திரம் பண்ணினர். பின் னும் பேரிலக்கணங்களைப் பெரிதும் கற்க விரும்பித் தமது சகோ தரர்களுடனே தக்ஷிண தேசத்திற்குப் பிரயாணமுற்று வாலிகண்ட புரத்திற்குத் தென்பாகத்திலுள்ள துறைமங்கலம் என்னும் நகரத் தைச் சார்ந்த ஒரு நந்தனவனத்தில் சிவபூசை செய்துகொண்டிருந் தனர். அக் காலத்தில், அக் கிராமாதிபதியாயும், சிவலிங்க தாரியா யும், குருலிங்க சங்கம பத்தியிற் சிறப்புற்றவராயும் விளங்கிய அண்ணுமலை ரேட்டியார் என்பவர் சிவப்பிரகாச சுவாமிகள் வரவைக் கேள்வியுற்று, அங்கடைந்து தரிசித்த மாத்திரத்தில், அவரிடத்தே அநுக்கிரகம் பெற விரும்பி அடிமை பூண்டு "சுவாமீ! தேவரீர் இவ் விடத்தில் வாசஞ்செய்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்து அவரை யுடன்படுத்தித் தங்கள் குருவாகிய சென்னவசவையர் மடத்திற்கு மேற்றிசையில் ஒரு திருமடங்கட்டி அதில் சுவாமிகளை எழுந்தருளுவித்து அகோராத்திரம் பிரிவின்றி அணுக்கத் தொண்ட ராய் அமர்ந்திருக்க, சிவப்பிரகாச சுவாமிகள் அவருக்குச் சன்மார்க் கங்களைப் போதித்துக்கொண்டு இரண்டு வருஷம் வரையில் அங்கே யெழுந்தருளி யிருந்தார்.

(தொடரும்)